www.Padasalai.Net www.CBSEtips.in

V12Acc

விருதுநகர் மாவட்டப் பள்ளிகள்
முதல் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2023

வகுப்பு 12

கணக்குப்பதிவியல்

நேரம் : 1.30 மணி மதிப்பெண்கள்: 50

**I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:** **10×1=10**

1) கடனாளிகளின் தொடக்க இருப்பு ₹ 30,000; பெற்ற ரொக்கம் ₹ 1,00,000; கடன் விற்பனை ₹ 90,000; கடனாளிகளின் இறுதி இருப்பு ..........?
அ) ₹ 30,000 ஆ) ₹ 1,30,000 இ) ₹ 40,000 ஈ) ₹ 20,000

2) முழுமைபெறா பதிவேடுகளை பொதுவாக பராமரித்து வருவது
அ) நிறுமம் ஆ) அரசு
இ) சிறிய அளவிலான தனியார் வணிகம் ஈ) பன்னாட்டு நிறுவனங்கள்

3) பொறுப்புகளை காட்டிலும் மிகுதியாக உள்ள சொத்துக்கள்
அ) நட்டம் ஆ) ரொக்கம் இ) முதல் ஈ) இலாபம்

4) உயில்கொடை ஒரு
அ) வருவாயின செலவு ஆ) முதலினச் செலவு
இ) வருவாயின வரவு ஈ) முதலின வரவு

5) வருவாய் மற்றும் செலவின கணக்கு ஒரு
அ) பெயரளவு கணக்கு ஆ) சொத்து கணக்கு
இ) ஆள்சார் கணக்கு ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு

6) ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக பெற்ற நன்கொடை
அ) வருவாயின வரவு ஆ) முதலின வரவு
இ) வருவாயினச் செலவு ஈ) முதலினச் செலவு

7) கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாத நிலையில் நிறுவனத்தின் இலாபம் கூட்டாளிகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படுவது
அ) சமமான விகிதத்தில் ஆ) முதல் விகிதத்தில்
இ) இரண்டும் (அ) மற்றும் (ஆ) ஈ) மேற்கூறிய எதுவுமில்லை

8) கூட்டாண்மை நிறுவனத்தில், நிலைமுதல் முறை பின்பற்றப்படும்போது, பின்வருவனவற்றுள் எது முதல் கணக்கில் காட்டப்படும்?
அ) கூடுதல் முதல் கொண்டு வந்தது ஆ) முதல்மீது வட்டி
இ) எடுப்புகள் மீது வட்டி ஈ) இலாபப் பகிர்வு

9) கூட்டாளிகளிடமிருந்து நிறுவனம் கடன்கள் பெற்றிருந்தால், அக்கடன்களுக்கு இந்திய கூட்டாண்மைச் சட்டம், 1932-ன்படி வழங்கப்படும் வட்டிவீதம்
அ) ஆண்டுக்கு 8% ஆ) ஆண்டுக்கு 12%
இ) ஆண்டுக்கு 5% ஈ) ஆண்டுக்கு 6%

10) தொடக்க நிலை அறிக்கை வழக்கமாக தயாரிக்கப்படுவது
அ) தொடக்க முதல் கண்டறிய ஆ) இறுதி முதல் கண்டறிய
இ) அவ்வாண்டின் இலாபம் கண்டறிய ஈ) அவ்வாண்டின் நட்டம் கண்டறிய

**II. ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும்:** **5×2=10**
**(வினா எண் 17 கட்டாயம்)**

11) இரட்டைப்பதிவு முறை பின்பற்றாத போது, சிறிய அளவிலான தனிவணிகர் பொதுவாக பராமரித்து வரும் கணக்குகளைத் தருக.

12) உயில்கொடை என்றால் என்ன?

13) கூட்டாண்மை ஒப்பாவணம் என்றால் என்ன?

14) கீழ்க்காணும் விவரங்களிலிருந்து இலாபம் அல்லது நட்டம் கண்டறியவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| ஆண்டின் தொடக்க முதல் (ஏப்ரல் 1, 2018) | 5,00,000 |
| ஆண்டின் இறுதி முதல் (மார்ச் 31, 2019) | 8,50,000 |
| அவ்வாண்டில் கொண்டு வந்த கூடுதல் முதல் | 1,20,000 |
| அவ்வாண்டில் எடுப்புகள் | 70,000 |

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net  www.CBSEtips.in



15) பின்வரும் விவரங்கள் சீர்காழி பாடகர்கள் சங்கத்தின் வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

| | ₹ |
|---|---|
| 1.4.2018 அன்று எழுது பொருள்கள் இருப்பு | 2,600 |
| அவ்வாண்டில் வாங்கிய எழுது பொருள்கள் | 6,500 |
| 31.3.2019 அன்று எழுது பொருள்கள் இருப்பு | 2,200 |

16) கீழ்க்காணும் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு மற்றும் கூடுதல் தகவல்களிலிருந்து 2018, டிசம்பர் 31ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவின கணக்கில் காட்டப்பட வேண்டிய சந்தா தொகையினைக் கணக்கிடவும்.

| பெறுதல்கள் | ₹ | ₹ | செலுத்தல்கள் | ₹ | ₹ |
|---|---|---|---|---|---|
| சந்தா | | | | | |
| 2017 | 28,000 | | | | |
| 2018 | 1,72,000 | | | | |
| 2019 | 12,000 | 2,12,000 | | | |

**கூடுதல் தகவல்கள்** : 2018ம் ஆண்டில் பெற வேண்டிய சந்தா ₹ 8,000.

17) பின்வரும் தகவல்களிலிருந்து கடன் விற்பனையை காணவும்.

| **விவரம்** | ₹ |
|---|---|
| 2018, ஏப்ரல் 1 அன்று கடனாளிகள் | 1,00,000 |
| கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 2,30,000 |
| அளித்த தள்ளுபடி | 5,000 |
| உள்திருப்பம் | 25,000 |
| 2019, மார்ச் 31 அன்று கடனாளிகள் | 1,20,000 |

**III. ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும்: 5×3=15**
**(வினா எண் 24 கட்டாயம்)**

18) கூட்டாண்மை ஒப்பாவணத்தின் உள்ளடக்கங்கள் ஏதேனும் ஆறினைத் தரவும்.

19) முழுமை பெறா பதிவேடுகளின் இயல்புகள் யாவை? (3 தலைப்புகள் விளக்கம்)

20) வருவாய் மற்றும் செலவினக் கணக்கு என்றால் என்ன?

21) பின்வரும் விவரங்களிலிருந்து பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு தயாரிக்கவும் மற்றும் கடனாளியிடமிருந்து பெற்ற மாற்றுச்சீட்டுத் தொகையினைக் கணக்கிடவும்.

| **விவரம்** | ₹ |
|---|---|
| ஆண்டு தொடக்கத்தில் பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 1,40,000 |
| ஆண்டு முடிவில் பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 2,00,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுக்காக ரொக்கம் பெற்றது | 3,90,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது | 30,000 |

22) சேலம் விளையாட்டு மன்றத்தின் 2019, ஏப்ரல் 1 அன்றைய முதல் நிதியைக் கணக்கிடவும்.

| **விவரம்** | ₹ |
|---|---|
| விளையாட்டு உபகரணங்கள் | 30,000 |
| கணிப்பொறி | 25,000 |
| 2018-19 ஆம் ஆண்டில் சந்தா பெற வேண்டியது | 5,000 |
| 2019-20 ஆம் ஆண்டிற்காக முன்கூட்டி பெற்ற சந்தா | 8,000 |
| பரிசு நிதி | 10,000 |
| பரிசு நிதி முதலீடுகள் | 10,000 |
| கைரொக்கம் | 7,000 |
| வங்கி ரொக்கம் | 21,000 |

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



23) 2018 ஜனவரி 1 அன்று பேகம் மற்றும் பாத்திமா என்ற கூட்டாளிகளின் முதல் கணக்குகள் முறையே ₹50,000 மற்றும் ₹40,000 இருப்பினைக் காட்டியது. 2018 அக்டோபர் 1 அன்று பேகம் கூடுதல் முதலாக ₹10,000 கொண்டு வந்தார் மற்றும் 2018, மே 1 அன்று பாத்திமா கொண்டு வந்த கூடுதல் முதல் ₹9,000. டிசம்பர் 31, 2018 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய முதல் மீது வட்டி 4% ஆண்டுக்கு கணக்கிடவும்.

24) பின்வரும் விவரங்கள் ஒரு சங்கத்தின் 2017-2018 ஆம் ஆண்டிற்குரிய இறுதி கணக்குகளில் எவ்வாறு தோன்றும்?

| விவரம் | ₹ |
|---|---|
| 1.4.2017 அன்று பரிசு நிதி | 60,000 |
| 1.4.2017 அன்று பரிசு நிதிக்கான முதலீடு | 60,000 |
| பரிசு நிதி முதலீடு மீதான வட்டி பெற்றது | 6,000 |
| பரிசுகள் வழங்கியது | 8,000 |
| பரிசு நிதிக்காக நன்கொடைப் பெற்றது | 12,000 |

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:** **3×5=15**

25) அ) நிலை அறிக்கை மற்றும் இருப்புநிலைக்குறிப்புக்கும் இடையே உள்ள வேறுபாடுகளைத் தரவும்.

**(அல்லது)**

ஆ) ஊட்டி மனமகிழ் மன்றத்தின் பின்வரும் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கைத் தயாரிக்கவும்.

| பெறுதல்கள் | ₹ | செலுத்தல்கள் | ₹ |
|---|---|---|---|
| தொடக்க இருப்பு | | விளையாட்டு பொருள் வாங்கியது | 10,000 |
| கை ரொக்கம் | 5,000 | எழுதுபொருளுக்காக செலுத்தியது | 7,000 |
| வாடகை பெற்றது | 10,000 | கணிப்பொறி வாங்கியது | 25,000 |
| முதலீடுகள் விற்றது | 8,000 | சம்பளம் | 20,000 |
| சந்தா பெற்றது | 54,000 | இறுதி இருப்பு | |
| | | கை ரொக்கம் | 15,000 |
| | 77,000 | | 77,000 |

26) அ) பின்வரும் தகவல்களிலிருந்து பத்மா மற்றும் பத்மினி என்ற கூட்டாளிகள் முதல் மாறுபடும் முதல் எனக் கொண்டு அவர்களின் முதல் கணக்குகளைத் தயாரிக்கவும்.

| விவரம் | பத்மினி ₹ | பத்மா ₹ |
|---|---|---|
| 2018, ஜனவரி 1 அன்று முதல் (வரவிருப்பு) | 5,00,000 | 4,00,000 |
| 2018 ஆம் ஆண்டில் எடுப்புகள் | 70,000 | 40,000 |
| எடுப்புகள் மீது வட்டி | 2,000 | 1,000 |
| 2018-ல் இலாபப்பங்கு | 52,000 | 40,000 |
| முதல்மீது வட்டி | 30,000 | 24,000 |
| ஊதியம் | 45,000 | - |
| கழிவு | - | 21,000 |

**(அல்லது)**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

ஆ) 2017, ஏப்ரல் 1 அன்று கணேஷ் ₹75,000 முதலுடன் தொழிலைத் தொடங்கினார். அவர் முறையான கணக்கேடுகளை பராமரிக்கவில்லை. 31.3.2018 ஆம் நாளைய அவருடைய ஏடுகளின் விவரங்கள் பின்வருமாறு.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| ரொக்கம் | 5,000 | கடனாளிகள் | 16,000 |
| சரக்கிருப்பு | 18,000 | கடனீந்தோர் | 9,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 7,000 | வங்கி ரொக்கம் | 24,000 |
| அறைகலன் | 3,000 | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 6,000 |
| நிலம் (ம) கட்டடங்கள் | 30,000 | | |

அவ்வாண்டில் தன்னுடைய சொந்த பயனுக்காக அவர் ₹15,000 எடுத்துக் கொண்டார். அவ்வாண்டில் அவர் கொண்டு வந்த கூடுதல் முதல் ₹20,000. அவருடைய இலாபம் அல்லது நட்டத்தைக் கண்டறியவும்.

27) அ) திருச்சி கல்வியியல் மன்றத்தின் கீழ்க்காணும் தகவல்களிலிருந்து 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கினைத் தயார் செய்யவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| தொடக்க ரொக்க இருப்பு (1.1.2018) | 20,000 | பாதுகாப்பு பெட்டக வாடகை பெற்றது | 12,000 |
| முதலீடுகள் செய்தது | 80,000 | அறைகலன் விற்றது | 5,000 |
| மதிப்பூதியம் செலுத்தியது | 3,000 | பொதுச்செலவுகள் | 7,000 |
| நன்கொடை பெற்றது | 80,000 | அஞ்சல் செலவுகள் | 1,000 |
| தணிக்கைக் கட்டணம் செலுத்தியது | 2,000 | சந்தா பெற்றது | 10,000 |

**(அல்லது)**

ஆ) A, B, C மற்றும் D ஆகியோர் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளிகள். நிறுவனத்தில் கூட்டாண்மை ஒப்பாவணம் ஏதுமில்லை. பின்வருவனவற்றை எவ்வாறு மேற்கொள்வீர்கள்?

i) A அதிக முதல் வழங்கியுள்ளார். அவர் முதல் மீது வட்டி ஆண்டுக்கு 12% கோருகிறார்.

ii) B ஒவ்வொரு மாதமும் ₹ 1,000 எடுத்துக் கொள்கிறார். ஏனைய கூட்டாளிகள் B-யிடம் நிறுவனத்திற்கு ஆண்டுக்கு 10% எடுப்பு மீது வட்டி அளிக்குமாறு கேட்கிறார்கள். ஆனால் B அதனை ஒப்புக் கொள்ளவில்லை.

iii) Cயிடமிருந்து நிறுவனத்திற்கு பெறப்பட்ட கடன் ₹ 10,000 அவர் கடன்மீது வட்டி ஆண்டுக்கு 9% வேண்டும் என்று கோருகிறார். A மற்றும் B அதனை ஒப்புக்கொள்ளவில்லை.

iv) D தனது முழுநேரத்தையும் தொழிலில் செலவிடுவதால் அவர் ஒவ்வொரு மாதமும் ₹ 5,000 ஊதியம் வேண்டுமென்று கோருகிறார். B மற்றும் C அதனை ஒப்புக்கொள்ளவில்லை.

V) A இலாபத்தினை முதல் விகிதத்தில் பகிர்ந்தளிக்க வேண்டும் என்கிறார். ஆனால் B, C மற்றும் D அதனை ஒப்புக்கொள்ளவில்லை.

www.Padasalai.Net